யாவது ஒப்படைத்திருக்கலாம். ஏன் அப்பொருள்களை ஒப்படைக்கவில்லை என்பதுதான் கேள்வி. மகாநாட்டிற்கு ஏன் வரவில்லை என்பது கேள்வியல்ல. அதைப் பொறுத்த பிரச்சினையில் விளக்கம் கோரப்பட்டிருக்கின்றது. அது ஆராய்ச்சியில் இருந்து வருகின்றது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, பொருள்கள் மகாநாட்டில் காட்சிக்குக் கொண்டுவரப்படவில்லையே தவிர, பள்ளியிலேயே அவற்றை ஒழுங்காக வைத்திருக்கின்றார்கள் என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்போது கேட்கின்ற கேள்வி மகாநாட்டிற்கு ஏன் கொண்டுவரவில்லை என்பதுதான். அதற்கான பதில் என்ன?

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, என்ன கேட்க வருகிறேன் என்பது தெரியாமலேயே, முன்னாலேயே நீங்கள் 'அப்ஸ்ட்ராக்ட்' பண்ணிவிடுகிறீர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நீங்கள் கேட்பதைத்தான் நானும் கேட்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, அப்படிச் சொல்வதென்றால், நான் கேள்வி கேட்பதை நிறுத்திக்கொள்கின்றேன்.

Educational Institutions in the Alagappa College Campus

@* 68. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Educational Institutions in the Alagappa College Campus, Sekkalai, Karaikudi;

(*b*) whether the staff employed in all these institutions are granted House Rent Allowance; and

(*c*) if not, the reasons therefor?

@ 23—11—1973 வினப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

அழகப்பா கல்லூரி வளவுக்குள் உள்ள கல்வி நிலையங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) காரைக்குடி, செக்காலை, அழகப்பா கல்லூரி வளவுக்குள் உள்ள கல்வி நிலையங்கள் எத்தனை?

(இ) இந்தக் கல்வி நிலையங்கள் அனைத்திலும் பணிபுரியும் பணியாளர் களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறதா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) அழகப்பா கல்லூரியை மையமாகக் கொண்டுள்ள இடத்தில் மொத்தம் 8 கல்வி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 6 கல்வி நிலையங்கள் மட்டும்தான் (3 பள்ளிகள், 3 கல்லூரிகள்) அங்கீகாரம் பெற்றவை.

(இ) 2 பள்ளிகளில் 31--12--72 வரை வீட்டு வாடகைப்படி வழங்கப்பட்டு வந்தது. 1--1--73 முதல் வழங்குவதற்கு அரசின் ஆணை கோரப்பட்டுள்ளது. மற்ற 4 கல்வி நிலையங்களில் வீட்டு வாடகைப்படி வழங்கப்படவில்லை.

(உ) கல்வி ஆணை 584, நாள் 20--4--71 மற்றும் 1745, நாள் 12--10--71-ன் படி மேற்சொன்ன கல்வி நிலையங்கள் நகராட்சி எல்லைக்குள் அமையாததால் அந்நிலையங்களில் பணிபுரிவோருக்கு வீட்டு வாடகைப்படி வழங்க இயலாது.

College Unions

@* 69. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the office-bearers of the College Unions are now being elected indirectly by the class representatives; and

(*b*) if so, the reason for introducing the policy of indirect election?

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.